22nd July 1964]

யாது. புது சொசைட்டிகள் ஆரம்பிப்பதற்கு முன் இருக்கிற சொசைட்டிகளுக்கு பணம் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 1964-65-க்கு இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அதை இப்பொழுது ஐந்து லட்ச மாக உயர்த்தியிருக்கிறோம்.

திரு. சி. கொளந்தைசாமி கவுண்டர் : சார், மலைஜாதிகளுக்கு வீடு கட்ட ஒன்றரை வருஷமாக நானும் அலைந்து பார்க்கிறேன். பள்ளிக்கூடம் கட்ட கட்டிடம் கிடையாது. பனமரத்துப்பட்டி பக்கத்தில் இருக்கிற தும்பல்பட்டியிலே பள்ளிக்கூடத்துக்கு, பஞ்சாயத்து ஆபீசுக்கு, இதற்கு எல்லாம் கட்டிடம் கிடையாது. நானும் தாசில்தாரிடம், கலெக்டரிடம் சென்று சொல்லிப்பார்த் தாகி விட்டது. பார்க்கிறோம், பார்க்கிறோம் என்கிறார்களே தவிர, திட்டத்தை செய்யவில்லை. இது விஷயத்திலே சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது வீடு கட்டும் திட்டம். பஞ்சாயத்து ஆபீசு, பள்ளிக்கூடம் அது பற்றி என்னுடைய சகா மந்திரிக்கு கேள்வி போட்டால் அவர்கள் பதில் சொல்வார்கள்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, to implement the rules regarding the Rural Housing Scheme properly, will the Government come forward to simplify them and also not insist on the title deeds as is being done now?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, if the society is not satisfied about the title of the person who applies for a loan, then it will become difficult to recover the money from that person. Therefore, generally we insist on a proper title being proved in favour of the person who wants a loan.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : சபாநாயகர் அவர்களே, இப்பொழுது வீடு கட்டும் கூட்டுறவு சொசைட்டிகளுக்கு ஐந்து லட்சம் ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்கது. அநேக சங்கங்கள் பணம் இல்லாததால் நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தை எப்பொழுது கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆர்.சி.எஸ். அவர்களுக்கு இவ்வளவு அளவுக்கு கடன் அப்ளிகேஷன்கள் வாங்கி அனுப்பும் படி உத்தரவு போட்டிருக்கிறோம்.

Employment to Scheduled Castes

*635 *Q.*—SRI S. MADHAVAN : } SRI M. KARUNANIDHI : } Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have taken steps to implement the recommendations of the Seminar on Employment of Scheduled Castes and Scheduled Tribes; and

22nd July 1964]

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) The recommendations made by the Seminar on Employment of Scheduled Castes and Scheduled Tribes are under consideration.

திரு. செ. மாதவன் : செமினுரில் பேசிய பரிவுரை என்ன? அதுபற்றி அரசாங்கத்தின் கருதது என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : பல முக்கியமான கருத்துக்களை தெரிவித்திருககிருர்கள். அதை டைரக்டருக்கு அனுப்பி பரிசீலனை செய்து ரிபோர்ட் கொடுக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது.

Idikki Project

* 636 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the details of the discussions held between the Madras and Kerala Governments on the Idikki Project; and

(*b*) when the project is likely to be taken up for execution?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The possibility of diversion to this State of the surplus waters of the west flowing rivers of Kerala, including the surplus waters of the Periyar at Idikki, was discussed between the Ministers of the two States in July 1963, when it was agreed that the Engineers of the two States should examine the availability of the supplies in the various west flowing rivers. The Chief Engineer (Irrigation), Madras, has since carried out his investigation and submitted a report. Copies of the report have been sent to the Government of Kerala and their reply is awaited.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : இந்தத் திட்டம் மிக முக்கியமானது. நீண்ட நாட்களாகப் பரிசிலனையில் இருந்துவருகிறது. ஆகவே, இதில் ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டும். கேரள அரசாங்கத்தார் இடிக்கி ஒப்பந்தத்திற்குத் தயாராக இருக்கிருர்கள். கரண்ட் எடுக்கவும் அவர்கள் ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் தயாராக இருக்கிறபோது, இதில் உடனடியாக முடிவு எடுப்பதற்கு ஏன் தாமதம் ஏற்படவேண்டும்? தாமதத்திற்குக் காரணம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : வேருெரு அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தவேண்டிய விஷயம் இது. அவர்கள் தயாராக இருந்து நமக்குக் கொடுக்க முன்வந்தால் நிச்சயமாக மிக வேகமாக நமது அரசாங்கம் அந்தத் திட்டத்தை நடத்தி முடிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனுல், இதுபற்றி மற்ருெரு அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கும்போது, இதைக் குறித்து அதிகமாக நாம் கேள்விகள் கேட்டு, அதற்கு நான் பதில் சொல்வதை எதிர் பார்க்காமலிருந்தால் கொஞ்சம் நன்ருக இருக்கும்.